திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, கள்ளக் குறிச்சி மருத்துவ மனை பெரிய மருத்துவ மனையாக இருக்கிறது. அதே நேரத்திலே ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பிட்டல் கடலூரிலே இருப்பதால் அங்கிருந்து 60 மைல் தூரம் செல்லவேண்டுமென்ற நிலமை இருக்கிறது. அருகாமையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவசர நிமித்தமாக ரத்தம் தேவைப் பட்டால் அங்கே பிளட் பாங்க் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, கள்ளக்குறிச்சி மருத்துவ மனையிலே பிளட் பாங்க் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இப்போது ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

இளையாங்குடி மருத்துவமனைக் கட்டிடம்

* வினா எண். 732—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முகவை மாவட்டம், இளையாங்குடியில் 40 படுக்கைகள்கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்கான டிபாசிட் ரூபாய் ஒரு லட்சம் கட்டி 3 வருடங்கள் ஆகியும் இன்னும் எந்த வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம், எனில், ஏன் வேலை துவக்கப்படவில்லை?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) & (இ) இம்மருத்துவ மனைக்காக ரூ. 3.00 லட்சம் செலவில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு 1979–80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஒரு ஆண்டுக்கு முனனாடிப் போடப்பட்டது. நாங்கள் டெபாசிட் செய்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டது. வருமா வராதா என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். இந்த அரசு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு சாங்ஷன் ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால், எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதைச் சொல்லமுடியுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனை கட்டப்பட வேண்டுமென்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாக 74 ஆம் ஆண்டிலே வழங்கினார்களென்றும் இதற்கு முன்னாலே இருந்தவர்கள் என்ன காரணத்தினாலோ அதைப் புறக்கணித்தாலும் இந்த அரசு கிராமப்புற மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளைத் தரவேண்டுமென்று உணர்ந்து இப்போது அதை எடுத்திருக்கிறது என்பதை நான் சொல்லி மிக விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மருத்துவ மனை அமைப்பதற்காக 74 ஆம் ஆண்டிலே ஒரு லட்சம் தரப்பட்டிருக்கிறது. ஆனால், 79 ஆம் ஆண்டிலே தான் அது கட்டப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறதே, இவ்வளவு காலம் தேங்கியதற்கு அரசு பொறுப்பா அல்லது அதிகாரிகள் பொறுப்பா அல்லது அமைச்சர்கள் பொறுப்பா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்ததற்கு மகிழ்ச்சி அடையுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் இதுபோன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு இதுவரையில் இரண்டாம் பகுதித் திட்டத்திற்கு மிகக் குறைந்த அளவிலேதான் தொகை ஒதுக்கப்பட்டன. ஆனால், இந்த அரசு வந்ததற்குப் பிறகு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் இது மிக அத்தியாவசியமானது என்று உணர்ந்து மிக அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிற காரணத்தால் இன்றைக்குப் பல மருத்துவ மனைகளைக் கட்டுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : மருத்துவ மானியக் கோரிக்கையின் போது அந்த அறிக்கையிலே இந்த ஆஸ்பத்திரிக்கு 3 லட்சம் ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது 2 லட்சம் என்று சொல்கிறார்களே எது சரி ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன : நான் இரண்டு லட்சம் என்று சொல்லவேயில்லை. மாண்புமிகு உறுப்பினர் எங்கேயோ எதையோ கேட்டுவிட்டு இங்கே சொல்கிறார்கள். 3 லட்சம் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 733-ம், 734-ம் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.